**பஸ்கொட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பஸ்கொட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் பூர்த்தி செய்திருந்த ரூபா 2,046,286 தொகை பெறுமதியான நிர்மாண வேலைகளை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 102,290 தொகை பெறுமதி யான கணினிகள் மற்றும் துணை கருவிகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 103,293 தொகை பெறுமதி யான அலுவலக உபகரணங்களை மூலதனப் படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (iv) மீளாய்வாண்டு இறுதி வரை மாகாண சபை ஏற்பாடுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 05 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 155,000 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு பணம் போதியளவு காணப்படாமை. |
| (v) மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய ரூபா 47,863 இற்கான சம்பள மீளளிப்பு குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (vi) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபை நிதியத்தில் இருந்து நிறைவேற்றப்பட்ட நிர்மாணவேலைகளுக்காக செலுத்த வேண்டிய செலவுகளுக்காக ரூபா 1,315,017 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | தொடர் வேலையாக்கி கொடுப்பனவு செய்யப் பட்டது. |
| (vii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 475,998 தொகை வீதம் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்குகளுக்கு சமர்ப் பிக்கப்பட்டுள்ளது. சிட்டையிடப்பட்ட பெறுமதி ஆக இருந்த போதிலும் கொடுப்பனவு செய்யும் போது அதனை விட குறைந்த தொகை கிடைத்துள்ளது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 3,461,121 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 404,178 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங் களை இணக் கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அட்டவணை நிலுவைக் கடன் வாடகை தண்டப் பணத்துடன் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,699,315 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 178(7) | சபைக்கு கிடைக்கும் டெண்டர் பத்திரங்களை போடுவதற்காக டெண்டர் பெட்டி ஒன்று பயன்படுத்தியிருக்காததுடன் டெண்டர் திறக்கும் நபரினால் டெண்டரின் ஒவ்வொரு பக்கத்திலும் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி போடப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 218 | 2014 ஆண்டின் பின்னர் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அடிப்படை விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 103 | கடந்த ஆண்டு பண்டக் கணிப்பீட்டின் போது சமர்ப்பிக்கப்படாத ரூபா 255,558 தொகை பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2004/புச/1 (2016 திருத்திய) 2016 திசெம்பர் 22 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுமாறு கோரப்பட்டது. |
| (இ) | 2008 ஜனவரி 25 திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | மீளாய்வாண்டின் போது 28 வர்த்தக நிலையங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் வியாபாரம் நடாத்தப்பட்டு வந்துள்ளது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது அனுமதிப் பத்திரம் வழங்கும் செய்முறைகளுக்கு தொடர்புபடுத்தியுள்ளது. |
| (ஈ) | 2010 திசெம்பர் 27 திகதி இலக்கம் தபபா/பபாகொ/ 2010/01 கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | 30 கடைகள் தொடர்பான உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிலுவைப் பணம் அறவிடப்பட்டுள்ள கடை உரிமையாளர்கிளன் உடன்படிக்கைகளை புதுப்பிப்பதுடன் நிலுவை தொகை செலுத்தாதவர்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,677,599 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,039,152 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,712,000 | 1,673,275 | 1,674,580 | 96,092 | 1,460,000 | 1,414,010 | 1,409,801 | 97,397 |
| வாடகை | 9,051,000 | 8,206,041 | 9,473,731 | 3,297,581 | 7,571,240 | 7,717,240 | 6,500,988 | 4,565,271 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 584,650 | 755,167 | 755,167 | - | 661,200 | 328,892 | 328,892 | - |
| ஏனைய வருமானங்கள் | 11,038,000 | 13,492,590 | 12,765,789 | 16,891,243 | 7,921,200 | 11,569,091 | 8,648,920 | 16,164,442 |
| மொத்தம் | 22,385,650 | 24,127,073 | 24,669,267 | 20,284,916 | 17,613,640 | 21,029,153 | 16,888,601 | 20,827,110 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 22,385,650 தொகையாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 20,827,110 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 24,127,073 தொகையுடன் ரூபா 44,954,183 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 24,669,267 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 20,284,916 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவைத் தொகையின் அறவீடுகள் 55 சதவீதம் ஆவதற்கான காரணம் மாகாண சபையில் இருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண த்திற்கான சிட்டையிடல்களில் கிடைத்த தொகை நூற்றிற்கு 10 வீதம் என்ற குறைந்த பெறுமதி யான காரணத்தினாயேயாகும். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **ஏக்கர் வரி** | | |
| ஆரம்ப ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 97,397 தொகையாகக் காணப்பட்ட துடன், ரூபா 25,154 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 26,459 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 96,092 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. அறவீடு களின் முன்னேற்றம் 22 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பணம் அறவீடு செய்ய இயலாத காணிகள் தொடர்பாக கணிப்பீட்டு அறிக்கையொன்று தயாரித்து பதிவழிப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **கடை வாடகை** | | |
| | ஆரம்ப நிலுவை மீதி ரூபா 2,539,221 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,776,867 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 4,316,088 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டு இறுதியில் உள்ளவாறு மொத்த அறவீடுகள் ரூபா 1,003,943 தொகையாக காணப்பட்டமையால், ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,312,145 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அறவீடுகளின் முன்னேற்றம் 23 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | **சந்தை குத்தகை** | | |
| | ஆரம்ப நிலுவை ரூபா 321,348 தொகை ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 5,939,766 தொகையுடன் மொத்த அறவீடு ரூபா 6,049,626 தொகை ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 211,488 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **அறிவித்தல் பலகை வருமானம்** | | |
| மீளாய்வாண்டின் போது அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தியிருந்த 30 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 79,953 இற்கான கட்டணம் ஒன்று அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் படி அறிவிக்கப் பட்டுள்ளது. |

### 2.2.6 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 572,008 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 15,521,989 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2018 ஆண்டு இறுதி அளவில் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 279,916 இற்கான தொகை ஒன்று கிடைத்திருந் ததுடன் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 3,720,083 இற்கான தொகை ஒன்று தற்போது கிடைத்துள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை** | | |
| கடந்த ஆண்டு நடமாடும் நூலகம் ஒன்று ஆரம்பிப்பதற்கான ரூபா 2,175,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த டாடா சுபர் இனத்தை சேர்ந்த டிரக் வண்டி மீளாய்வாண்டு இறுதி வரை மேற்கூறிய குறிக்கோளுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | உரிய கருமத்தின் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். | நடமாடும் நூலகத்திற்கு உரிய முறையில் வண்டியை தயார் செய்வதற்காக ஏற்பாடுகள் பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போனதால் 2020 ஆண்டின் போது எதிர்பார்த்த இலக்கினை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு** | | |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவை செய்வதற்கு சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் படி தேவையான எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 03 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைகள் பதவிக்கான முறைப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி உள்ளூராட்சி திணைக்களத்தின் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றாகும். மீதியாகவுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக பதவியணி விபரங்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதான செயலாளர் ஆகியோருக்கு |

| | | |
|---|---|---|
| | | அமைச்சுச் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்துள் ளேன். வெற்றிடம் எனக் காட்டப்பட்டுள்ள 09 ஆரம்ப நிலை பதவிகளை நிரப்புவதற் காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. |

### 3.3 பெறுகை

### 3.3.1 பெறுகைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைத் திட்டமொன்று இன்றி மீளாய்வாண்டின் போது கொள் வனவுகளுக்காக ரூபா 2,954,582 தொகை செலவிடப்பட்டுள்ளது. | வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப் பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு கொள்வனவு செய்திருந்த வெக்கியூ கிளீனர் இயந்திரத்திற்காக குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத் தில் இருந்து ரூபா 7,780 இற்கு கொள்வனவு செய்யாமல் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவுக்கு சமர்ப்பிக்காமல் கூடிய விலை சமர்ப் பித்திருந்த நிறுவனத்தில் இருந்து ரூபா 18,905 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | டென்டர் சபையின் தீர்மானம் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். | கேள்வி சபையில் இருந்து பெற்றிருந்த தீர்மானத்தை தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவுக்கு சமர்ப்பித்து அதன் பரிந்துரையை பெற்ற பின்னர் மீண்டும் டென்டர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்று கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 செலவு விடயங்களில் ரூபா 14,193,947 இற்கான சேமிப்பு காணப்பட்டது. அப்பெறுமதிகள் 5 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மூலான சொத்துக்களின் திருத்த ங்கள் மற்றும் பராமரிப்பின் கீழ் மீதியொன்று காட்டப்பட்டுள்ள காரணம் வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்த செலவுகள் குறைந்து ள்ளமையே. |

| | | |
|---|---|---|
| (ஆ) 04 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 5,822,532 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதி 2 சதவீதம் முதல் 38 சதவீதம் வரையான வீச்சில் காணப்படுகின்றது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏனைய வருமான விடயத்திற்கு சாதகமான முரண்களுக்கான காரணம் முன்னைய ஆண்டிற்கான நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 2,845,471 இற்கான தொகை ஒன்று கிடைத்த காரணத்தினாலேயே. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்தை பெற்றிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |